ஓம்
சிவாயநம



# திருமுறைத்தேன் அருள் அமுதம்

**2007 புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக**
**8ம், 9ம் தரத்திற்குரிய திருமுறைப் பாடல்கள்**
**நூலுருவில்**

முழுதும் உண்மை


ஒரு பொல்லாப்புமில்லை



எப்பவோ முடிந்த காரியம்

நாமறியோம்

நால்வர் பொற்றாள் எம் உயிர்த்துணையே






சிவதொண்டன் நிலைய
செல்லத்துரை சுவாமிகள்



பாடியவர்
திருமுறை இளம் கலைஞர்
தேவார இசைக்கலைமாணி
அண்ணாமலைப் பல்கலைக்கழகம் - தமிழ்நாடு


**சிவத்திரு வீரக்குட்டி உதயகுமார்**
தேத்தாத்தீவு- 01, தேத்தாத்தீவு,
களுவாஞ்சிகுடி.
தொ.பேசி. 065-2251194, 077-4210196

## நூல் பற்றிய விபரம்

| | |
|---|---|
| நூல் தலைப்பு | : "திருமுறைத் தேன் அருள் அமுதம்" |
| விடயம் | : சைவசமயப் பாடநூல்களில் உள்ள திருமுறைப் பாடல்கள் இறுவட்டாகத் தயாரிக்கப்பட்டு பொழிப் புரையோடு நூல்உருவாக்கம் செய்யப்பட்டுள்ளது. |
| முதல் பதிப்பு | : 2008. |
| பாடியவர், நூல் உருவாக்கம் செய்தவர் | : வீரக்குட்டி உதயகுமார். |
| முகவரி | : தேற்றாத்தீவு 01, தேற்றாத்தீவு, களுவாஞ்சிக்குடி. |
| பக்கங்கள் | : 36. |
| வெளியீடு | : சிவதொண்டன் நிலையம், செங்கலடி. |
| அட்டை வடிவமைப்பு | : S.சச்சிதானந்தம். |
| அச்சகம் | : வணசிங்கா அச்சகம், இல.126/1, திருமலைவீதி, மட்டக்களப்பு. |

ஓம்
சிவாய நம

# திருமுறைத் தேன் அருளமுதம்
# இறுவட்டு



(மாணவர்களினதும் எதிர்கால இந்து சமூகத்தினதும் திருமுறை ஓதும் திறனை உரமூட்டி வளம் சேர்க்கும் நோக்குடன் 2007ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் புதிய பாடத்திட்டத்திற்கு ஏற்ப தரம்-6-11 தரம் வரையான சைவ சமயப் பாடநூல்களில் உள்ள திருமுறைகளை தேர்ந்தெடுத்து பண்ணிசை கூட்டி தயாரிக்கப்பட்ட இருவட்டில் உள்ள பாடல்களை இலகுவான மொழிநடையில் அமைந்த பொழிப்புரையுடன் நூல் உருவாக்கம் செய்யப்பட்டுள்ளது.)

இத்திருமுறைப் பாடல்களைப் பாடியவர் இந்நூலை தயாரித்தவர் தேவார இசைக் கலைமாணி :

## சிவத்திரு. வீரக்குட்டி உதயகுமார்.

வெளியீடு
சிவதொண்டன் நிலையம்
செங்கலடி.

ஓம்
சிவாயநம

# கல்லடி இராமகிருஸ்ணமிசன் தலைவர், வணக்கத்திற்குரிய சுவாமி அஜராத்மானந்தாஜி அவர்களின் ஆசியுரை

திருமுறைகள் இந்து சமய மக்களின் பெரும் பொக்கிஷமாகும். இறைவனின் அன்பை உணர்ந்தவர்கள், இறைவனின் பெருமையை அனுபவித்து அவன் அருளாலே பாடிப் பரவசமடைந்தனர்.

எமது சைவ மாணவர்களுக்கு சைவ சமய பாடப்புத்தகத்தில் பல திருமுறைகளும் அவற்றின் பண்களும் இடம்பெற்றுள்ளன. இருந்த போதிலும் அவற்றை பண்ணோடு பாடுவதில் ஆசிரியர்களும் மாணவர்களும் பல சிரமங்களை எதிர் நோக்குகின்றனர். இதன் விளைவாக சமகாலத்தில் ஆலயங்களிலும், சமய வைபவங்களிலும் தேவாரம் பாடுவதற்கு திறமைவாய்ந்தவர்கள் இல்லாதிருக்கின்றனர்.

இத்தகைய குறைபாடுகளை நீக்கும் பொருட்டு இறைவன் கிருபையினாலே மட்டக்களப்பு தேற்றாத்தீவைச் சேர்ந்த திருவாளர் V.உதயகுமார் அவர்கள் "திருமுறைத்தேன் அருள் அமுதம்" என்ற பெயரில் இறுவட்டு ஒன்றினை தயாரித்திருப்பதோடு இப்பாடல்களை சிறிய நூல் உருவாகவும் இதனைத் தயாரித்திருக்கின்றார். இது வரவேற்கத்தக்க விடையமாகும். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் திருமுறையில் விசேடபட்டம் பெற்ற திரு V.உதயகுமார் அவர்களின் இப்பணி மகத்தானதும், காலத்தின் தேவையுமாகும்.

திரு. V.உதயகுமார் அவர்களை நாம் பாராட்டுவதோடு, இறைவனின் ஆசி இவருக்கு என்றும் கிடைக்கப் பிராத்திப்போம். அதேவேளை இந்துப் பெருமக்கள் அனைவரும் இந்த இறுவட்டினையும், இன்நூலினையும் பெற்று இப்பணியாளரை ஊக்குவிப்பதோடு, தினமும் காலையிலும் மாலையிலும் வீட்டில் இதனை ஒலிக்கச் செய்து இறையருளைப் பெற்று இனிதே வாழ வாழ்த்துகின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

இறைபணியில்

சுவாமி அஜராத்மானந்தா

(சுவாமி அஜராத்மானந்தா)

ஓம்

சிவாயநம

உ

## விநாயகர் துதி



திருச்சிற்றம்பலம்.

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவர் இடர்
கடிகணபதிவர அருளினன் மிகு கொடை
வடிவினற் பயில்வலி வலமுறை இறையே.

திருஞான சம்பந்தர்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.

திருச்சிற்றம்பலம்.

திருமந்திரம்

## நால்வர் துதி

திருச்சிற்றம்பலம்.

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்தொண்டர் பதம் போற்றி
ஊழிமலி திருவாதவூரர் திருத்தாள் போற்றி.

உமாபதி சிவாச்சாரியார்

அகரமாம் எழுத்துப்போல அனைத்திலுங் கலந்துநின்றே
இகபரம் இரண்டுமீந்த எழிற்குரு திருத்தாள் வாழ்க.

சிவயோகசுவாமி நற்சிந்தனை

## திருமுறைச் சிறப்பு

திருமுறையே சைவநெறிக் கருவூலம்
தென்தமிழின் - தேன் பாகாகும்.
திருமுறையே கயிலையின்கண் சிவபெருமான்
செவிமடுத்த - செந்தமிழ்வேதம்
திருமுறையே நடராசன் கரம்வருந்த
எழுதிய அருள் தெய்வநூலாம்
திருமுறையே சொக்கேசன் மதிமலிவாய்
மலர்ந்தருளும் சிறப்பிற்றாமல்.

திருச்சிற்றம்பலம்.

ஓம்
சிவாயநம

# திருமுறைத் தேன் அருளமுதம்

## எட்டாம் தரத்திற்கான திருமுறைப்பாடல்கள்

| பாடல் | பண் | இராகம் | தாளம் |
|---|---|---|---|
| ⁕ "மண்ணுலகத்தில்..." (வினாயகர் வணக்கம்) | | கம்பீரநாட்டை | விருத்தம் |
| ⁕ "திருவும் கல்வியும்..." (வினாயகர் வணக்கம்) | | கம்பீரநாட்டை | விருத்தம் |
| ⁕ "பூழியர் கோன்..." (நால்வர் துதி) | | கம்பீரநாட்டை | விருத்தம் |
| 1. "பிடியதன்..." (சம்பந்தர்) | | கம்பீரநாட்டை | ஆதி |
| 2. "சதுரம் மறைதான்.." (சம்பந்தர்) | இந்தளம் | மாயாமாளவகௌளை | ஆதி |
| 3. "மண்ணில் நல்லவண்ணம்.." (சம்பந்தர்) | கொல்லி | நவரோஸ் | மிஸ்ரசாபு |
| 4. "குனித்தபுருவமும்.." (அப்பர்) | - | சுத்ததன்னியாசி | விருத்தம் |
| 5. "பண்ணின்நேர் மொழியாள்.." (அப்பர்) | - | மாயாமாளவகௌளை | ஆதி |
| 6. "அரியானை அந்தணர் தம்.." (அப்பர்) | - | அரிகாம்போதி | விருத்தம் |
| 7. "நீளநினைந்து அடியேன்.." (சுந்தரர்) | நட்டராகம் | பந்துவராளி | ரூபகம் |
| 8. "தில்லை வாழ் அந்தணர்.." (சுந்தரர்) | கொல்லிக்கௌவாணம் | நவரோஸ் | கண்டசாபு |
| 9. "பாரோடு விண்ணாய்.." (திருவாசகம்)(மணிவாசகர்) | - | மோகனம் | விருத்தம் |
| 10. "ஏகநாயகனை.." (திருவிசைப்பா) (சேந்தனார்) | - | ஆனந்தபைரவி | விருத்தம் |
| 11. "மிண்டு மனத்தவர்.." (திருப்பல்லாண்டு (சேந்தனார்) | - | ஆகிரி | விருத்தம் |
| 12. "அன்பும் சிவமும்." (திருமந்திரம்) (திருமூலர்) | - | கானடா | ஆதி |
| 13. "ஐந்து பேரறிவும்.." (பெரிய புராணம் (சேக்கிழார்) | - | மத்தியமாவதி | விருத்தம் |
| 14. "சரணகமலாலயத்தை.." (திருப்புகழ்) (அருணகிரி நாதர்) | - | கருணாரஞ்சனி | கண்டசாபு |
| 15. "வான்முகில்..." (வாழ்த்து) | | | |

ஓம்
சிவாயநம

# திருமுறைத் தேன் அருளமுதம்

## எட்டாம் தரத்திற்கான திருமுறைப்பாடல்களும் அவற்றிற்கான பொழிப்புரைகளும்

## திருஞானசம்பந்தர் தேவாரம்

*திருச்சிற்றம்பலம்*

பாடல் - 01

ஞானசம்பந்தர் திருமறைக்காட்டில் திருக்கதவு அடைக்கப் பாடியருளிய அற்புதப்பதிகத்தின் முதற்பாடலான **"சதுரம் மறைதான்..."**. என்ற பாடல்.

| | | |
|---|---|---|
| **பண்** | - | இந்தளம் |
| **ராகம்** | - | மாயமாளவகௌளை |
| **தாளம்** | - | ஆதி |
| **தலம்** | - | திருமறைக்காடு |
| **இறைவன்** | - | மறைக்காட்டு ஈசன் |
| **இறைவி** | - | யாழைப்பழித்த மொழியாள் |
| **திருமுறை** | - | இரண்டாம் திருமுறை |

*திருச்சிற்றம்பலம்*

சதுரம் மறைதான் துதிசெய்து வணங்கும்
மதுரம் பொழில் சூழ் மறைக்காட்டுறை மைந்தா
இது நன்கிறை வைத்தருள் செய்க எனக்குன்
கதவம் திருக்காப்புக் கொள்ளுங் கருத்தாலே

*திருச்சிற்றம்பலம்*

**பொழிப்புரை :**

நான்கு வேதங்களும் போற்றி வணங்க இனிய சோலை சூழ்ந்த திருமறைக்காட்டில் வீற்றிருக்கும் வீரனே! உனது திருக்கதவு அடைக்கும் உள்ளக்கருத்தினாலே வேண்டும் இவ்வேண்டுதலுக்கு நல்லவண்ணம் அருள்வாயாக.

✷ மறைக்காடு என்னும் தலப்பெயரைப் பிரியுங்கள்.

✷ மறை என்னும் சொல்லுடன் சம்பந்தமுடைய பாடற் பகுதியைத் தெரிந்தெடுங்கள்.

✷ காடு என்னும் சொல்லுடன் சம்பந்தமுடைய பாடற் பகுதியைத் தெரிந்தெடுங்கள்.

ஓம்
சிவாயநம

பாடல் - 02

திருக்கழுமலப்பதிக்த்தில் வரும் மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் எனத் தொடங்கும் தேவாரம்.

| | | |
|---|---|---|
| **பண்** | - | கொல்லி |
| **ராகம்** | - | நவரொஸ் |
| **தாளம்** | - | மிஸ்ரசாபு |
| **தலம்** | - | திருக்கழுமலம் (சீர்காழி) |
| **இறைவன்** | - | தோணியப்பர் |
| **இறைவி** | - | பெரிய நாயகி |
| **திருமுறை** | - | மூன்றாம் திருமுறை |

*திருச்சிற்றம்பலம்*

மண்ணின் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணின் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவில்லை
கண்ணின் நல் ல.ஃதுறும் கழுமல வளநகர்
பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே.

*திருச்சிற்றம்பலம்*

**பொழிப்புரை :**
கண்ணுக்கினிய காட்சிகளுடைய கழுமலத் திருத்தலத்தில் பெரிய பெருமாட்டியுடன் பெரிய பெருமான் வீற்றிருக்கின்றாரல்லவா! அதனால் இம்மண்ணுலகில் வாழ் நாளெல்லாம் நன்றாக வாழலாம். வாழ்வு முடிந்ததும் நற்கதி சேர்வதற்கும் யாதொரு ஐயமும் இல்லை.

✳ கழுமல வளநகரில் பெருந்தகை அருளோடு இருப்பதால் நமக்கு வாய்க்கும் இரு நலன்களையும் கண்டறியுங்கள்.

ஓம்
சிவாயநம

# திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்

## திருவிருத்தம்

பாடல் - 03

*அப்பர் சுவாமிகள் அருளிய திருவிருத்தப் பாடலான "குனித்த புருவமும்..." என்ற பாடல்.*

| | | |
|---|---|---|
| **ராகம்** | - | *சுத்ததன்னியாசி* |
| **தாளம்** | - | *ஆதி* |
| **தலம்** | - | *தில்லை* |
| **இறைவன்** | - | *நடராஜர்* |
| **இறைவி** | - | *சிவகாமி அம்பாள்* |
| **திருமுறை** | - | *நான்காம் திருமுறை* |

*திருச்சிற்றம்பலம்*

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியில் பால்வெண் ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற் பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே

*திருச்சிற்றம்பலம்*

**பொழிப்புரை :**

*வளைந்த புருவமும் கொவ்வைப்பழம் போன்ற சிவந்த வாயில் முகிழ்க்கும் புன்சிரிப்பும், குளிர்ந்த சடையும், பவளம் போற் சிவந்த மேனியிற் பூசிய வெண்ணீறும், பேரின்பம் தரும் தூக்கிய திருவடியுமாய் ஆனந்த நடனம் ஆடும் நடராசப் பெருமானைத் தரிசிக்கும் பேரின்பம் பெறுவதாயின் இம்மண்ணுலகில் மனிதராய்ப் பிறப்பதும் விரும்பத்தக்கதே.*

✳ *நடராசப் பெருமானின் திருக்கோல அழகை அங்கமங்கமாகப் பாடிப் பரவுங்கள்.*

ஓம்
சிவாயநம

# திருகுறுந்தொகை

பாடல் - 04

திருமறைக்காட்டிலே திருக்கதவு திறக்க அப்பர் சுவாமிகளால் அருளிச்செய்யப்பெற்ற திருப்பதிகத்தின் முதற் பாடலான "பண்ணின் நேர்மொழி யாள்..." எனத் தொடங்கும் தேவாரம்.

| | | |
|---|---|---|
| **ராகம்** | - | மாயமாளவகௌளை |
| **தாளம்** | - | ஆதி |
| **தலம்** | - | திருமறைக்காடு |
| **இறைவன்** | - | மறைக்காட்டு ஈசன் |
| **இறைவி** | - | யாழைப்பழித்த மொழியாள் |
| **திருமுறை** | - | ஐந்தாம் திருமுறை |

*திருச்சிற்றம்பலம்*

பண்ணின் நேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணி னார்வலஞ் செய்மறைக் காடரோ
கண்ணி னால்உமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்மினே

*திருச்சிற்றம்பலம்*

**பொழிப்புரை :**

இங்கு வீற்றிருப்பது பண்ணிசை போன்ற இன்மொழியினரான உமையம்மையாரைப் பாகமாகக் கொண்ட பெருமானோ அல்லது மண்ணுலகினர் வலம் வந்து வணங்கும் மறைக்காட்டு மைந்தரோ? அடியேன் இக்கண்ணினால் உம்மைக்காணுமாறு திருக்கதவினைத் திறந்தருள் செய்வீராக.

✳ மறைக்காட்டு மூலத்தானத்தில் இருக்கும் இறைவனின் திருக்கோலம் யாதாயிருக்கும் என ஊகித்துப் பாருங்கள்.

ஓம்
சிவாயநம

# திருத்தாண்டகம்

பாடல் - 05

நாவுக்கரசர் தேவாரங்களின் வரிசையிலே அடுத்து வருவது ஆறாந் திருமுறையிலுள்ள பெரிய திருத்தாண்டகப்பதிகத்தில் வரும் "அரியானை அந்தணர்தம்..." எனத் தொடங்கும் பாடலாகும்.

**ராகம்** - ஹரிகாம்போதி.
(இது விருத்தமாக இடம்பெறுகின்றது)

*திருச்சிற்றம்பலம்*

அரியானை அந்தணர்தம் சிந்தையானை
அருமறையின் அகத்தானை அணுவையார்க்கும்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர்கள் தங் கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் பூலியூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே

*திருச்சிற்றம்பலம்*

**பொழிப்புரை :**
*பெரும்பற்றப் புலியூரில் வீற்றிருக்கும் பெருமான் அடைதற்கு அரியவர். அந்தணரைப்பிரியாது அவர்தம் மனத்தில் உறைபவர். வேதத்தின் உட்பொருளாயுள்ளவர். நுண்ணியர். ஆராலும் காண்டற்கரிய உள்பொருளாயுள்ளவர். தேனையும் பாலையும் போன்று தித்திப்பவர். பேரொளிப் பிழம்பாய் ஒளிர்பவர். தேவர்க்குத் தேவர். திருமால் பிரமனாதியோராய் நிற்பவர். தீ, காற்று, கடல், மலை ஆகியவற்றில் எல்லாம் கலந்து நிற்கும் பெரியோர். இப்பெருஞ் சீர்மையெல்லாம் பொருந்திய அவரைப் புகழ்ந்து துதியாத நாளெல்லாம் பிறப்பின் பயனடையாத நாள்களே!*

✳ *பெரும்பற்றப்புலியூரானின் பெருஞ்சீர்மைகளை ஒவ்வொன்றாகச் சொல்லிப் பாருங்கள்.*

ஓம்
சிவாயநம

# சுந்தரமூர்த்திநாயனார் தேவாரம்

பாடல் - 06

சுந்தரமூர்த்திநாயனார் அருளிய **"நீள நினைந்தடியேன்..."** எனத் தொடங்கும் தேவாரம்.

| | | |
|---|---|---|
| **பண்** | - | நட்டராகம் |
| **ராகம்** | - | பந்துவராழி |
| **தாளம்** | - | ரூபகம் |
| **தலம்** | - | திருக்கோளிலி |
| **இறைவி** | - | வண்டமர் பூங்குழலி |
| **இறைவன்** | - | கோளிலி நாதர் |
| **திருமுறை** | - | ஏழு |

*திருச்சிற்றம்பலம்*

நீள நினைந்தடியேன் உமை நித்தலும் கைதொழுவேன்
வாளனக் கண்மடவாள் அவள் வாடிவருந்தாமே
கோளிலி எம்பெருமான் குண்டையூர்ச் சில நெல்லுப் பெற்றேன்
ஆளிலை எம்பெருமான் அவை அட்டித்தரப்பணியே

*திருச்சிற்றம்பலம்*

**பொழிப்புரை :**

திருக்கோளிலியில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானே! அடியேன் உன்னை நாடொறும் நீள நினைத்து கைதொழுகின்றேன். வாள் போலும் கண்களையுடைய பரவையார் நெல்லின்றி வாடி வருந்தாதபடி குண்டையூரில் சிறிது நெல் பெற்றேன். அவற்றைக் கொண்டு செல்ல ஆளில்லை. எம்பெருமானே! அவற்றைக் கொண்டு செல்வதற்கு எவரையேனும் பணித்தருள்வீராக.

✳ சுந்தரமூர்த்தி சுவாமிகள் தொழுத முறைப்படி நாமும் தொழுதற்கு நமக்குது நினைவு எப்படி இருத்தல் வேண்டும்?

ஓம்
சிவாயநம

பாடல் - 07

சிவபெருமான் சுந்தரருக்கு அடியவர்களின் தொண்டின் பெருமையைப் போற்றிப் பாடும்படி **"தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்"** என அடியெடுத்துக் கொடுக்க சுந்தரர் பாடியருளிய திருதொண்டர்த் தொகையின் முதற் பாடலான **"தில்லைவாழ் அந்தணர்தம்...."**எனத் தொடங்கும் தேவாரம்.

| | | |
|---|---|---|
| **பண்** | - | கொல்லிக்கௌவாணம் |
| **ராகம்** | - | நவரொஸ் |
| **தாளம்** | - | திஸ்டதிரிபுடை |
| **தலம்** | - | திருவாரூர் |
| **இறைவன்** | - | வன்மீகநாதர் |
| **இறைவி** | - | கமலாம்பிகை |
| **திருமுறை** | - | ஏழாம் திருமுறை |

## *திருச்சிற்றம்பலம்*

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க்கு அடியேன்
இல்லையேயென்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்தன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக்கு அடியேன்
விரிபொழில் சூழ் குன்றையார் விறன்மிண்டற்கு அடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக்கு அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்காளே

## *திருச்சிற்றம்பலம்*

**பொழிப்புரை :**

திருவாரூர்ப்பெருமானுக்கு மீளாஆளாயுள்ள ஆரூரனான அடியேன் சிற்றம் பலவானாருக்குப் பூசை செய்யும் தில்லைவாழ் அந்தணர்களது அடியவர்க்கும் அடியேன் திருநீலகண்டத்தை மந்திரமாகக் கொண்ட திருநீலகண்டநாயனாருக்கு அடியேன். தம்மிடமுள்ள எதனையும் இல்லையென்னாது சிவனடியார்க்கு அளிக்கும் இயற்பகை நாயனார்க்கு அடியேன். இளையான்குடியூரில் வாழ்ந்த மாற நாயனார்க்கு அடியேன். குத்துண்டு வீழும் நிலையிலும் சிவவேடமே மெய்ப்பொருளென்று உயிர்நீத்துப் பெருவெற்றி கொண்ட மெய்ப்பொருள் நாயனார்க்கு அடியேன். பரந்த சோலை சூழ்ந்த செங்குன்றூரில் தோன்றிய விறன்மிண்ட நாயனாருக்கு அடியேன். முல்லைப்பூ மாலையணிந்த அமர்நீதி நாயனாருக்கு அடியேன்.

✳ இத் தேவாரத்தில் போற்றப்பெறும் நாயன்மார்களது திருநாமங்களை நிரற்படுத்துங்கள்.

ஓம்
சிவாயநம

## திருவாசகம்

பாடல் - 08

மணிவாசகர் திருப்பெருந்துறையில் அருளிச்செய்த "வாழாப்பத்து" என்ற பதிகத்தில் வரும் முதல் பாடலான "பாரொடு விண்ணாய்ப்பரந்த..." எனத் தொடங்கும் திருவாசகம்.

**ராகம்** - மோகனம்
(இது விருத்தமாக இடம்பெறுகின்றது.)

*திருச்சிற்றம்பலம்*

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்து அரசே
திருப்பெருந்துறையுறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத்துரைக்கேன்
ஆண்டநீ அருளிலையானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருக என்றருள்புரியாயே

*திருச்சிற்றம்பலம்*

**பொழிப்புரை :**

மண், விண் எங்கும் பரந்தொளிரும் பரஞ்சோதியே ! சிவபுரத்தில் (அரிஅயன் முதலாய் மண்ணும், விண்ணும் வணங்கச்) சிறப்புடன் வீற்றிருக்கும் இராசாதிராசனே! (இத்) திருப்பெருந்துறையிலே அடியரெல்லாம் வணங்கி உய்யும் வண்ணம் திருவடி வடிவாய் வீற்றிருக்கும் பெருமானே! நீ என்னை ஆட்கொண்டீர்! நானும் மற்றொரு பற்றுமின்றி உன்னையே பற்றியிருக்கிறேன். கடல் சூழ்ந்த (மண்ணாகச் செய்யும்) இம்மண்ணுலகில் என்னால் வாழ்தற்கியலாது.(நீர் சீரொடு பொலியும் சிவபுரத்துத் திருக்கோலக்கத்தைக் காணவே விரும்புகிறேன்.) என்னை ஆண்டுகொண்ட நீ சிவபுரத்திற் சேர்க்காது மண்ணில் வாழ்ந்து வருந்தவிட்டால் ஆரிடம் முறையிடலாம். ஆரைநோகலாம்! என்னை வருக என்று அழைத்துச் சிவபுரத்தில் சேர்த்தருள்வாயாக.

✳ இத் திருவாசகத்திலே மாணிக்கவாசக சுவாமிகள் நொந்து பாடும் வாசகங்கள் சிலவற்றை நீங்களும் சொல்லிப் பாருங்கள்.

ஓம்
சிவாயநம

# திருவிசைப்பா

பாடல் - 09

சேந்தனார் அருளிய "ஏகநாயகனை இமையவர்..." என்ற திருவிசைப்பா.

ராகம் - ஆனந்தபைரவி
(இது விருத்தமாக இடம்பெறுகின்றது.)

*திருச்சிற்றம்பலம்*

ஏகநா யகனை இமையவர்க் கரசை
என்னுயிர்க்கமுதினை எதிரில்
போக நாயகனை புயல்வணற் கருளிப்
போன்னெடுஞ் சிவிகையாவூர்ந்த
மேகநா யகனை மிகுதிருவீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
யோக நாயகனை அன்றி மற்றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே

*திருச்சிற்றம்பலம்*

**பொழிப்புரை :**

*விண்ணினின்றும் திருவீழிமிழலைக் கிறங்கிய விமானத்துள் வீற்றிருக்கும் சிவயோகப் பேற்றை அளிக்கும் இறைவன் உலகுயிர் யாவற்றிற்கும் ஒரு தனித்தலைவனாயுள்ளவன் தேவர்க்கெல்லாம் தலைவன், என் உயிரைவாழ்விக்கும் அமுதன் ஈடிணையில்லாத சுகபோகங்களை வழங்கும் தலைவன் மேகநிறத்தவனான திருமாலுக்கு அருள் செய்து அவனை மேகவாகனமாக ஊர்ந்த (மழை) மேகத்திலும் மேலான அருள் மழை பொழியும் தலைவன். அவனல்லாது மற்றொரு தலைவர் உள்ளதாக யான் அறியேன்.*

✳ நாயகன் எனவரும் நான்கு இடங்களிலுமுள்ள நயங்களைக் கேட்டறியுங்கள்.

ஓம்
சிவாயநம

# திருப்பல்லாண்டு

பாடல் - 10

சேந்தனார் அருளிய "மிண்டு மனத்தவர்..." எனும் திருப்பல்லாண்டுப் பாடல் ஆகிரி என்ற ராகத்தில் விருத்தமாகப் இடம்பெறுகின்றது.

ராகம் - ஆகிரி

*திருச்சிற்றம்பலம்*

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டும் கொடுத்துங் குடிகுடி
ஈசற்காட் செய்மின் குழாம் புகுந்து
அண்டங் கடந்தபொருள் அள
வில்லதோர் ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ளபொருள்
என்றே பல்லாண்டு கூறுதுமே

*திருச்சிற்றம்பலம்*

**பொழிப்புரை :**

வஞ்சமனத்தவரான அடியாரல்லாதவர்கள் அகலப் போங்கள். தூய மனத்தவரான மெய்யடியார்கள் விரைந்து வாருங்கள். பழைய அடியார் திருக்கூட்டத்துடன் சேர்ந்து நடராசப் பெருமானுக்கு எமது தொழும்பினைக் கொடுத்தும், அவரது அருளினைக் கொண்டும் ஆட்படுங்கள். இதனைச் சந்ததி சந்ததியாகத் தொடர்ந்து செய்யுங்கள். நாமெல்லாம் தில்லை நடராசப் பெருமான் அண்டத்தைக் கடந்த பெரிய பொருள். அளவில்லாத ஆனந்தத்தைத் தரும் பொருள். அன்றும் இன்றும் என்றுமுள்ள நித்தியப் பொருள் என்றென்று பல்லாண்டு கூறி வாழ்த்துவோம்.

✳ நாம் திருப்பல்லாண்டு கூறி வாழ்த்தும் பொருளின் சிறப்புக்களை ஒவ்வொன்றாகச் சொல்லுங்கள்.

ஓம்
சிவாயநம

# திருமந்திரம்

பாடல் - 11

திருமூலரால் அருளிச் செய்யப்பட்ட பத்தாந் திருமுறையாகவுள்ள திருமந்திரப் பாடலான **“அன்பும் சிவமும்...”**

**ராகம்** - கானடா
**தாளம்** - ஆதி

*திருச்சிற்றம்பலம்*

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவதாரும் அறிந்த பின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே.

*திருச்சிற்றம்பலம்*

**பொழிப்புரை :**

அறிவில்லாதவர்கள் அன்பும் சிவமும் வேறுவேறென்பர். அன்பும் சிவமும் ஒன்று என்று வாய்ச் சொல்லால் கூறும் யாவரும் அன்பே சிவம் என்பதை அறியாதவர். அன்பே சிவமாவதென்பதை அறிந்த யாவரும் அன்பே சிவமென்று மோனத்திருப்பார்கள்.

✳ அறிவுடையார்க்கு இலக்கணம் கூறுங்கள்.

ஓம்
சிவாயநம

# பெரியபுராணம்

பாடல் - 12

பஞ்ச புராண ஒழுங்கில் இறுதியாக இடம்பெறுவது சேக்கிழார் சுவாமிகளால் அருளிச் செய்யப்பட்ட பெரியபுராணமாகும். இதில் வரும் **"ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள..."** எனத் தொடங்கும் பாடல்.

**ராகம்** - *மத்தியமாவதி*
(இது விருத்தமாக இடம்பெறுகின்றது)

*திருச்சிற்றம்பலம்*

ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தை யேயாகக் குணமொரு மூன்றும்
திருந்து சாத்துவீகமேயாக
இந்துவாழ் சடையானாடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்

*திருச்சிற்றம்பலம்*

**பொழிப்புரை :**

*சந்திரன் வாழும் சடையினையுடைய நடராசப் பெருமானின் கூத்து ஆனந்தக் கூத்து, முடிவில்லாத அனவரதத் தாண்டவம்; ஒப்பற்ற தனி நடனம்; அண்ட சராசரங்களை யெல்லாம் ஆட்டும் பெரும் கூத்து. இத்திருக் கூத்தை ஐம்பொறிகளின் அறிவெல்லாவற்றையும் கண்கள் கொள்ளவும் நாற்கரணங்களும் மனமொன்றின் நினைப்பேயாகவும், முக்குணங்களும் மேலான சத்துவ குணமேயாகவும், பார்த்தும், நினைந்தும், குணம் உயர்ந்தும், தரிசித்து நின்ற சுந்தரமூர்த்தி சுவாமிகள் அதனால் வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து மாறாத மகிழ்ச்சியில் மலர்ச்சி பெற்றார்.*

✳ *ஆனந்த எல்லையில் தனிப் பெரும் கூத்து' என்பதிலுள்ள கூத்து என்னும் சொல்லை மற்றைய நான்கு சொற்களுடனும் தனித்தனியாகச் சேர்த்துச் சொல்லிப்பாருங்கள்.*

ஓம்
சிவாயநம

# திருப்புகழ்

பாடல் - 13

ராகம் - கருனாரஞ்சனி
தாளம் - கண்டசாபு

*திருச்சிற்றம்பலம்*

சரணகம லாலயத்தை அரை நிமிஷ நேரமட்டில்
தவமுறை தியானம் வைக்க - அறியாத
சடக சட மூட மட்டி பவவினையி லேசனித்த
தமியன் மிடியால் மயக்க - முறுவேனோ
கருணை புரியாதிருப்ப தெனகுறையி வேளைசெப்பு
கயிலை மலை நாதர் பெற்ற - குமரோனே
கடகபுய மீது ரத்ன மணியணி பொன் மாலை செச்சை
கமழுமணமார் கடப்ப - அணிவோனே
தருணமிதையா மிகுத்த கனமதுறு நீள்சவுக்ய
சகல செல்வ யோகமிக்க - பெருவாழ்வு
தகைமை சிவ ஞான முத்தி பரகதியும் நீ கொடுத்து
தவி புரிய வேணும் நெய்த்த - வடிவேலா
அருணதள பாதபத்மம் அதுநிதமுமேதுதிக்க
அரிய தமிழ் தானளித்த மயில் வீரா
அதிசய மனேகமுற்ற பழனி மலைமீதுதித்த
அழகு திருவேரகத்தின் முருகோனே

*திருச்சிற்றம்பலம*

## வாழ்த்து

*திருச்சிற்றம்பலம்*

“வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கோள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.”

*திருச்சிற்றம்பலம்*

ஓம்
சிவாயநம

# திருமுறைத் தேன் அருளமுதம்

## ஒன்பதாம் தரத்திற்கான திருமுறைப்பாடல்கள்

| | பாடல் | பண் | இராகம் | தாளம் |
|---|---|---|---|---|
| 1. | "பூவார் மலர் கொண்டு.." (சம்பந்தர்) | தக்கேசி | காம்போதி | ஆதி |
| 2. | "காதலாகிக் கசிந்து.." (சம்பந்தர்) | கௌசிகம் | பைரவி | ஆதி |
| 3. | I"தூஞ்சலும் தூஞ்சல்.." | காந்தாரபஞ்சமம் | கேதாரகௌளை | ஆதி |
| | II"ஊனில் உயிர்பை.." (சம்பந்தர்) | காந்தாரபஞ்சமம் | கேதாரகௌளை | ஆதி |
| 4. | I"விண்ணுற அடுக்கிய.." | காந்தாரபஞ்சமம் | கேதாரகௌளை | ஆதி |
| | II"இல்லக விளக்கது.." (அப்பர்) | காந்தாரபஞ்சமம | கேதாரகௌளை | ஆதி |
| 5. | I"மாசில் வீணையும்.." II"நமச்சிவா யவே.." III"விறகில் தீயினன்.." (அப்பர்) | - | பூர்வி கல்யாணி | ஆதி |
| 6. | "ஓசை ஒலி யெல்லாம்.." "தூண்டு சுடரனைய.." (அப்பர்) | - | அரிகாம்போதி | விருத்தம் |
| 7. | "ஏழிசையாய்.." (சுந்தரர்) | பழம்பஞ்சுரம் | சங்கராபரணம் | ஆதி |
| 8. | I"மற்றுப் பற்றெனு.." II"செம் போனேர் சடை.." (சுந்தரர்) | பழம்பஞ்சுரம் | சங்கராபரணம் | ஆதி |
| 9. | "மீளா அடிடை.." (சுந்தரர்) | செந்துருத்தி | மத்தியமாவதி | மிஸ்ரசாபு |
| 10. | "அத்தனே அண்டர்.." (திருவாசகம்) (மணிவாசகர்) | - | மோகனம் | ஆதி |
| 11. | "நையாத மனத்தினனை.." (திருவிசைப்பா) (கருவூர்த்தேவர்) | - | ஆனந்தபைரவி | விருத்தம் |
| 12. | "சொல்லாண்ட சுருதி.." (திருப்பல்லாண்டு) (சேந்தனார்) | - | ஆகிரி | விருத்தம் |
| 13. | "யாவர்க்குமாம்.." (திருமந்திரம்) (திருமூலர்) | - | இந்தோளம் | விருத்தம் |
| 14. | "இறவாத இன்ப அன்பு..." (பெரியபுராணம்) (சேக்கிழார்) | - | மத்தியமாவதி | விருத்தம்ஆதி |
| 15. | "தனம் தரும்.." (அபிராமி அந்தாதி) (அபிராமிப்பட்டர்) | - | சுத்த தன்னியாசி | விருத்தம் |
| 16. | "சொல்லிற் பனமும்.." (சகலகலா வள்ளி மலை) (குமரகுருபரர்) | - | கல்யாணி | விருத்தம் |
| 17. | "ஆழிமழைக் கண்ணா.." (நாலாயிரம் திவ்யபிரபந்தம்) | - | சௌராட்சரம் | ஆதி |
| 18. | "கைத்தலம் நிறைகனி.." (திருபுகழ்) (அருணகிரிநாதர்) | - | கம்பீர நாட்டை | ஆதி |

ஓம்
சிவாயநம

# திருமுறைத் தேன் அருளமுதம்

## ஒன்பதாம் தரத்திற்கான திருமுறைப்பாடல்களும் அவற்றிற்கான பொழிப்புரைகளும்

## திருஞானசம்பந்தர் தேவாரம்

*திருச்சிற்றம்பலம்*

பாடல் - 01

திருஞானசம்பந்தர் திருவண்ணாமலையில் அருளிய "பூவார் மலர் கொண்டடியார்..." என்ற தேவாரம்.

| | | |
|---|---|---|
| **பண்** | - | தக்கேசி |
| **ராகம்** | - | காம்போதி |
| **தாளம்** | - | ஆதி |
| **தலம்** | - | திருவண்ணாமலை |
| **இறைவன்** | - | அருணாசலேஸ்வரர் |
| **இறைவி** | - | உண்ணாமுலை அம்மை |
| **திருமுறை** | - | முதலாந் திருமுறை |

*திருச்சிற்றம்பலம்*

பூவார் மலர்கொண் டடியார் தொழுவார்
புகழ்வார் வானோர்கள்
மூவார் புரங்க ளெரித்தவன்று
மூவர்க் கருள்செய்தார்
தூமா மழைநின் றதிர வெருவித்
தொறுவின் நிரையோடும்
ஆமாம்பி ணைவந் தணையுஞ் சார
லண்ணா மலையாரே

*திருச்சிற்றம்பலம்*

**பொழிப்புரை :**

மழைத்துளிகள் தூவும் மேகம் இடி முழக்கம் செய்ய, அது கேட்டு ஆட்டுமந்தையுடன் காட்டுப்பசுக்களும் வெருண்டோடி வந்து சேரும் அடிவாரத்தையுடையது அண்ணாமலை. இவ்வண்ணாமலையில் எழுந்தருளியிருக்கும் அருணாசலர் அழியாவரம் பெற்ற அசுரர் ஆண்ட முப்புரங்களை எரித்த பொழுது, அம்முப்புரங்களிலுமிருந்த மூன்று பத்தர்களுக்கு ஒரு தீங்கும் நேராதவாறு அருள் செய்தார். இவ்வாறு பத்தர்க்கு அருள் செய்யும் அண்ணாமலையாரை அடியார்கள் பொலிவான மலர்களைச் சொரிந்து வழிபடுவார்கள். தேவர்கள் புகழ்ந்து போற்றுவார்கள்.

✳ இத் தேவாரத்திலுள்ள அண்ணாமலைச் சாரல் பற்றிய விவரணப் பகுதியைத் தெரியுங்கள்

✳அண்ணாமலையாரின் அருள் வண்ணம் பற்றிய பகுதியைப் பாடுங்கள்.

✳அண்ணாமலையாரை அடியார் தொழும் முறையினையும், வானோர் போற்றும் முறையினையும் கண்டறியுங்கள்.

பாடல் - 02

திருஞானசம்பந்தர் அருளிய நமச்சிவாயப் பதிகத்தின் முதற் பாடலான "காதலாகிக் கசிந்துகண்ணீர்..." என்ற பாடல்.

| | | |
|---|---|---|
| **பண்** | - | கௌசிகம் |
| **ராகம்** | - | பைரவி |
| **தாளம்** | - | ஆதி |
| **தலம்** | - | திருப்பெருமண நல்லூர் |
| **இறைவன்** | - | சிவலோகதியாகேசர் |
| **இறைவி** | - | திருவெண்ணீற்றுமை |
| **திருமுறை** | - | மூன்றாந் திருமுறை |

*திருச்சிற்றம்பலம்*

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே.

*திருச்சிற்றம்பலம்*

**பொழிப்புரை :**

சிவநாமமான நமச்சிவாய மந்திரம் நால் வேதத்தினதும் மெய்ப் பொருளாயுள்ளது. அது அன்பு பெருகி, மனம் கசிந்து, கண்ணீர் பெருக ஓதுபவர்களை சிவனடி சேரும் செந்நெறியிற் செலுத்தும்.

✳ நமச்சிவாய மந்திரம் ஓதும் பொழுது இருக்க வேண்டிய மூன்று அம்சங்களையும் அறியுங்கள். இத்தேவாரத்தில் சொல்லியவண்ணம் நமச்சிவாய மந்திரத்தை நாளும் பன்முறை சொல்லிப் பழகுவோம்.

பாடல் - 03

திருஞானசம்பந்தர் அருளிய பஞ்சாக்கரத் திருப்பதிகத்தின் முதற்பாடலான துஞ்சலும் துஞ்சலிலாத போழ்தினும்..." எனத்தொடங்கும் எனும் தேவாரம்.

| | | |
|---|---|---|
| **பண்** | - | காந்தார பஞ்சமம் |
| **ராகம்** | - | கேதாரகௌளை |
| **தாளம்** | - | ஆதி |
| **தலம்** | - | பொது |
| **திருமுறை** | - | மூன்றாந் திருமுறை |

ஓம்
சிவாயநம

*திருச்சிற்றம்பலம்*

துஞ்சலும் துஞ்சலி லாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்று
அஞ்ச உதைத்தன அஞ்செ ழுத்துமே.

*திருச்சிற்றம்பலம்*

**பொழிப்புரை :**

நெஞ்சில் வஞ்சமில்லாமல் திருவடியைப் பூசித்து ஓதிய மார்க்கண்டர்க்காக அவரது உயிருண்ணவந்த கூற்றை உதைப்பித்தது அஞ்செழுத்து மந்திரமே. ஆதலினால் உறங்கும் போதும் உறங்காத போதும் மனங்கசிந்து நமச்சிவாய மந்திரத்தை நாள்தோறும் மனதில் நினையுங்கள்.

✷ காதலாகி எனும் தேவாரத்தில் நமச்சிவாய மந்திரத்தை ஓதும் படி சொல்லப்பட்டிருக்கிறது. இத்தேவாரத்திலே ஓதுதல் என்பதின்றி 'நினைமின்' என்று உளது. இரண்டுக்குமுள்ள வேறுபாடென்ன என்றறியுங்கள். இவற்றுள் எது மிகச் சிறந்ததாகலாம்.

## திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்

பாடல் - 04

திருநாவுக்கரசு நாயனார் அருளிய நமசிவாயப் பதிகத்தில்வரும் **"வின்னுற அடுக்கிய...."** எனும் மூன்றாவது பாடலும் **"இல்லக விளக்கது...."**எனும் எட்டாவது பாடலும்

| | | |
|---|---|---|
| **பண்** | - | காந்தார பஞ்சமம் |
| **ராகம்** | - | கேதார கௌளை |
| **தாளம்** | - | ஆதி |
| **தலம்** | - | பொது |
| **திருமுறை** | - | நான்கு |

*திருச்சிற்றம்பலம்*

விண்ணுற அடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகில்அவை யொன்று மில்லையாம்
பண்ணிய வுலகினிற் பயின்ற பாவத்தை
நண்ணிநின் றறுப்பது நமச்சி வாயவே

*திருச்சிற்றம்பலம்*

**பொழிப்புரை :**

ஆகாயம்அளவு அடுக்கிய விறகுக் குவியலில் சுடுநெருப்பு எரித்தற்குப் புகுந்தால் அக்குவியல் ஒன்றுமில்லாது சாம்பாராய் விடும். அதுபோல் உலகவாழ்வில் செய்த பாவ வினையை அறுத்து எரிப்பது நமச்சிவாய மந்திரமே.

✷ உவமானத்தையும் உமமானத்தால் விளக்கப்பெறும் பொருளையும் இணைத்துப் பார்ப்போம். வெவ்வழல் விண்ணுற அடுக்கியவிறகு நமச்சிவாய மந்திரம் பயின்ற பாவம்.

ஓம்
சிவாயநம

*திருச்சிற்றம்பலம்*

இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலரும் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே.

*திருச்சிற்றம்பலம்*

**பொழிப்புரை :**

வீட்டினுள் ஏற்றும் விளக்கு இருளைப் போக்கும். (அதுபோல்) மெய்ம் மொழிகளுள் விளங்குவதும், இயல்பாகவே சோதியாயுள்ளதும், பல இடங்களையும் விளக்கம் செய்வதும், உள்ளத்திற்கு ஒளி கொடுக்கும் நல்விளக்காயமைவதும் நம்சிவாய மந்திரம்.

✳ நமசிவாய மந்திரத்தால் விளக்கம் பெறும் இடங்களைத் தெரிவோம்.

பாடல் - 05

அப்பர் சுவாகள் அருளிய பதிகங்களின் வரிசையில் சமணசமயத்திலிருந்து சைவத்திற்கு மாறிய நாவுக்கரசரை சமணர்கள் நீற்றறையில் அடைத்த போது அவர் பாடியருளிய பதிகத்தின் முதற்பாடலான "மாசில் வீணையும்..." என்றபாடலும் இரண்டாம் பாடலான "நமச்சிவாயவே..." என்ற பாடலும் இறுதிப் பாடலான "விறகில் தீயினன்..." என்ற பாடலும்

| | | |
|---|---|---|
| **ராகம்** | - | பூர்விகல்யாணி |
| **தாளம்** | - | ஆதி |
| **தலம்** | - | பொது |
| **திருமுறை** | - | ஐந்தாம் திருமுறை |

*திருச்சிற்றம்பலம்*

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.

*திருச்சிற்றம்பலம்*

**பொழிப்புரை :**

வண்டுகள் ரீங்காரம்இசைக்கும் மலர்ப்பொய்கைக் கரையில், வசந்த காலத்து முழுநிலா எறிக்கும் இரவில், தென்றற் காற்று வீச, ஒரு குற்றமுமில்லாத வீணையிசையினைக் கேட்டு இன்புற்றிருப்பதை ஒருவாறு ஒப்பது. சிவபிரானது திருவடி நிழலில் இன்புற்றிருப்பது.

✳ ஈசன் இணையடி நீழலின் இன்பத்திற்கு உவமையாகக் காட்டப்பட்டிருப்பதை உணர முயல்வோம்.

*திருச்சிற்றம்பலம்*

நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே.

*திருச்சிற்றம்பலம்*

**பொழிப்புரை :**

கல்வியும், கல்விப்பேறான ஞானமும் நமச்சிவாய மந்திரம். திருவடிசேர்வதற்கு நான் அறிந்த வித்தையும் நமச்சிவாய மந்திரம். எனது நா இனிக்கச் சொல்லிப் போற்றுவதும் நமச்சிவாய மந்திரம். யாவர்க்கும் நல்வழி காட்டுவதும் நமச்சிவாய மந்திரமே.

*திருச்சிற்றம்பலம்*

விறகில் தீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவுக் கோல்நட் டுணர்வுக் கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே.

*திருச்சிற்றம்பலம்*

**பொழிப்புரை :**

விறகில் தீ போலவும், பாலில் நெய் போலவும், மணியில் ஒலி போலவும் சோதிப் பொருளான சிவபெருமான் மறைந்திருக்கின்றார். நாம் சிவனடியார் எனும் உறவு மத்தை நாட்டி அன்பாகிய கயிற்றினால் முறுக்கேறும் வண்ணம் கடைய அவர் வெளிப்பட்டு நிற்பார்.

✳ சோதிமயமான சிவபெருமான் மறைந்திருக்கும் அதிசயத்தை விளக்குவதற்குக் கூறப்பட்டுள்ள உவமானங்களை நிரற்படுத்துவோம்.

## திருத்தாண்டகம்

பாடல் - 06

நாவுக்கரசர் அருளிய பதிகங்களில் அடுத்து வருவன ஆறாந் திருமுறையாகப் வகுக்கப்பட்டுள்ள திருத்தாண்டகப் பதிகங்களிலுள்ள "ஓசைஒலியெலாம் ஆனாய் நீயே..." எனத் தொடங்கும் திருத்தாண்டகப் பாடலும். "தூண்டு சுடரனைய சோதி..." கண்டாய் எனத்தொடங்கும் பாடலும்.

**ராகம்** - ஹரிகாம்போதி
**(இது விருத்தமாக இடம்பெறுகின்றது.)**

ஓம்
சிவாயநம

*திருச்சிற்றம்பலம்*

ஓசை யொலியெலா மானாய் நீயே
உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே
வாச மலரெலா மானாய் நீயே
மலையான் மருகனாய் நின்றாய் நீயே
பேசப் பெரிதும் இனியாய் நீயே
பிரானாய் அடியென்மேல் வைத்தாய் நீயே
தேச விளக்கெலா மானாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதி

*திருச்சிற்றம்பலம்*

**பொழிப்புரை :**

*ஓசை ஒலி ஆகிய எல்லாமாய்ப் பொலிந்த உலகம் நீ. உலகிற்கு ஒரு தனி முதல்வனாய் நின்றவனும் நீயே. நறுமணம் கமழும் மலர்களெல்லாம் நீ. அம்மலர்களால் வழிபடும் வண்ணம் மலையரசன் மருகன் ஆகிய கோலங்களில் வந்தவனும் நீயே. யாவராலும் போற்றிப்புகழ்வதற்கு இனியவனும் நீ. நான் போற்றிப் பரவுதற்காய் எனது தலைமீது திருவடி சூட்டியவனும் நீயே. நாட்டிலுள்ள சூரிய சந்திரராகிய ஒளியெல்லாம் நீ. அவ்வொளிக்கெல்லாம் ஒளி கொடுக்கும் திருவையாறில் உறையும் செம்பொற் சோதியும் நீயே.*

✳ *சிவபெருமான் எல்லாமாய் நிற்கின்றார். என்பதற்கு எடுத்துக்காட்டுக்கள் சிலவற்றைப் பாடுவோம்.*

*திருச்சிற்றம்பலம்*

தூண்டு சுடரனைய சோதி கண்டாய்
தொல்லமரர் சூளா மணிதான் கண்டாய்
காண்டற் கரிய கடவுள் கண்டாய்
கருதுவார்க் காற்ற எளியான் கண்டாய்
வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்
மெய்ந்நெறி கண்டாய் விரத மெல்லாம்
மாண்ட மனத்தார் மனத்தான் கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் தானே

*திருச்சிற்றம்பலம்*

**பொழிப்புரை :**

மறைக்காட்டில் உறையும் மணவாளனாகிய சிவபெருமான் அன்பு தூண்டியதனால் சுடர் விட்டெரியும் சோதி விளக்காயுள்ளவன் என்பதையும், தேவர்கள் தம் தலையில் சூடும் சூளாமணி என்பதையும் அறிவாயாக. நினையாதவர்க்குக் காண்டற்கரிய கடவுளாயுள்ள அவனே நினைப்பவர்க்குக் காணுதற்கு மிகவும் எளியன் என்பதையும் சிந்தித்துத் தெளிவாயாக. வேண்டுவார்க்கு வேண்டுவதை அருள்பவன் என்பதை அறிவாயாக. மெய்ந்நெறியாயுள்ள அவனே விரதத்தில் மாட்சிமைப்பட்டவரது மனத்திலுள்ளவன் என்பதையும் கண்டு தெளிவாயாக.

✳ கடவுளது அரிய தன்மையையும், எளியதன்மையையும் அறிய முயல்வோம்.

## சுந்தரமூர்த்திநாயனார் தேவாரம்

பாடல் - 07

சுந்தரமூர்த்தி நாயனார் பாடியருளிய **"பத்திமையும் அடிமையும்.."** எனத்தொடங்கும் பதிகத்தின் பத்தாவது பாடலே **"ஏழிசையாய்..."** எனத் தொடங்கும் தேவாரம் ஆகும்.

| | | |
|---|---|---|
| **பண்** | - | பழம்பஞ்சுரம் |
| **ராகம்** | - | சங்கராபரணம் |
| **தாளம்** | - | ஆதி |
| **தலம்** | - | திருவாரூர் |
| **இறைவன்** | - | வன்மீகநாதர் |
| **இறைவி** | - | கமலாம்பிகை |
| **திருமுறை** | - | ஏழாம் திருமுறை |

*திருச்சிற்றம்பலம்*

ஏழிசையாய் இசைப்பயனாய் இன்னமுதாய் என்னுடைய
தோழனுமாய் யான் செய்யும் துரிசுகளுக்கு உடனாகி
மாழை ஒன்கண் பரவையைத் தந்து ஆண்டானை மதியில்லா
ஏழையேன் பிரிந்திருக்கேன் என் ஆரூர் இறைவனையே

*திருச்சிற்றம்பலம்*

**பொழிப்புரை :**

ஏழு சுரங்களாலான இசையாயும். இசையின் பயனான இன்பமாயும், இன்பமான அமுதமாயும், எனக்கு நல்லது செய்யும் நண்பனாயும், நண்பனாய் நான் செய்யும் குறும்புகளுக்கு உடனின்று உதவுபவனாய் அழகிய கண்களையுடைய பரவையாரை மனையாளாகத் தந்தவராயுமுள்ள திருவாரூர்ப் பெருமானை இத்தனையும் அறியும் மதியில்லாத அருள் வறியனான அடியேன் எவ்வாறு பிரிந்திருப்பேன்.

✳ ஆரூர் இறைவனுக்கும் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கும் உள்ள உறவை உணர்த்தும் சொல்லைத் தெரிவோம்.

ஓம்
சிவாயநம

பாடல் - 08

சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய நமச்சிவாயப் பதிகத்தில் வரும் முதற்பாடலான "மற்றுப்பற்றெனக..." எனத் தொடங்கும் பாடலும். எட்டாவது பாடலான "செம்போனேர்சடையாய்..." என்ற பாடலும்.

| | | |
|---|---|---|
| **பண்** | - | பழம்பஞ்சுரம் |
| **ராகம்** | - | சங்கராபரணம் |
| **தாளம்** | - | மிஸ்ரசாபு |
| **தலம்** | - | திருப்பாண்டிக்கொடுமுடி |
| **இறைவன்** | - | கொடுமுடிநாதர் |
| **இறைவி** | - | பண்மொழியம்மை |
| **திருமுறை** | - | ஏழாம் திருமுறை |

*திருச்சிற்றம்பலம்*

மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப்
பாத மேமனம் பாவித்தேன்
பெற்ற லும்பிறந் தேன்இ னிப்பிற
வாத தன்மைவந் தெய்தினேன்
கற்ற வர்தொழு தேத்தும் சீர்க்கறை
யூரில் பாண்டிக் கொடுமுடி
நற்றவாஉ னை நான்ம றக்கினும்
சொல்லு நா நமச்சி வாயவே

*திருச்சிற்றம்பலம்*

**பொழிப்புரை:**

*நீயே நினைக்கத்தக்கவன் என்பதைக் கற்றறிந்தவர்கள் தொழுது வணங்கும் சீர்மையுடைய பாண்டிக்கொடுமுடித்தலத்தில் உறையும் மகாயோகியே! அடியேன் மற்றொரு நினைவுமின்றி உன் திருவடியையே என் மனதில் நினைந்திருந்தேன். அவ்வாறு நினைக்கப்பெற்றதால் (மாதரார் மேல் மனம் வைத்தமையால்) பிறந்தவனாகிய நான் இனிப் பிறவாத பெருநிலையை அடைந்தேன். நற்றவனே! நான் உன்னை மறந்தாலும் என்நா நமச்சிவாய மந்திரத்தை மறவாது ஓதும்.*

✳ இத்தேவாரத்தின் உயிர்நிலையான 'ஒரு மொழியை'த் தெரிந்து கொள்வோம்.

ஓம்
சிவாயநம

*திருச்சிற்றம்பலம்*

செம்பொ னேர்சடை யாய்திரிபுரம்
தீயெழச்சிலை கோலினாய்
வம்பு லாங்குழ லாளைப் பாகம்
அமர்ந்து காவிரிக் கோட்டிடைக்
கொம்பின் மேற்குயில் கூவ மாமயில்
ஆடு பாண்டிக் கொடுமுடி
நம்பனே உனை நான் மறக்கினும்
சொல்லு நா நமச்சி வாயவே

*திருச்சிற்றம்பலம்*

**பொழிப்புரை :**

பசும் பொன்னின் நிறத்தையுடைய செஞ்சடையினனே! முப்புரம் எரியுமாறு வில்வளைத்தவனே! இயற்கை மணம் வீசும் கூந்தலையுடைய உமையம்மையாரை, ஒரு பாகத்திற் கொண்டவனே! காவிரி நதிக்கரையிலுள்ள மரக் கிளைகளிலிருந்து குயில் கூவ மயில் ஆடும் பாண்டிக்கொடு முடியில் வீற்றிருக்கும் பெருமானே! உனை நான் மறந்தாலும் எனது நா நமசிவாய மந்திரத்தை மறவாது ஓதும்.

✳ பாண்டிக் கொடுமுடித் திருத்தலத்தின் இயற்கை அழகு கூறும் பகுதியைக் கோடிட்டுக் காட்டுங்கள்.

பாடல் - 09

சுந்தரமூர்த்திநாயனார் திருவாரூர் இறைவனை இறைஞ்சிப் பாடி பார்வையை பெற்ற அற்புதப் பதிகத்தின் முதல் பாடலான "மீளா **அடிமை...**" எனத் தொடங்கும் தேவாராம் ஆகும்.

| | | |
|---|---|---|
| **பண்** | - | செந்துருத்தி |
| **ராகம்** | - | மத்திமாவதி |
| **தாளம்** | - | ஆதி |
| **தலம்** | - | திருவாரூர் |
| **இறைவன்** | - | வன்மீகநாதர் |
| **இறைவி** | - | கமலாம்பிகை |
| **திருமுறை** | - | ஏழாம் திருமுறை |

*திருச்சிற்றம்பலம்*

மீளா அடிமை உமக்கே ஆளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே கனன்று முகத்தால் மிகவாடி
ஆளா இருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாழாங் கிருப்பீர் திருவாரூரீர் வாழ்ந்து போதீரே

*திருச்சிற்றம்பலம்*

ஓம்
சிவாயநம

**பொழிப்புரை :**

திருவாரூர்ப்பெருமானே! நான் உனது மீளா அடிமை. அடியவனான யான் பிறரிடம் எதனையும் வேண்டமாட்டேன். இவ்வாறான நான் பொந்தில் புகைந்து எரியும் தீப்போல் உளத்தில் வெதும்பி, அதனால் முகப்பொலிவின்றி வாடியிருத்தல் முறையோ! அடிமையாயிருபோரைத் தாங்குதல் தலைவரானார் கடனல்லவா? அடியவனாகிய நான் எனது துன்பத்தைச் சொன்ன பொழுது (அதனைக் கேட்டும் 'சும்மா' இருக்கின்றீரே! இவ்வாறிருப்பின் (நான் எவ்வாறெனினும் மாண்டு போகிறேன்) நீங்கள் நன்றாக வாழ்ந்திருங்கள்.

✳ சுந்தரமூர்த்திசுவாமிகளின் அடிமைத்திறத்தைக் காட்டும் ஒரு சொல்லைத் தெரியுங்கள் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் முகவாட்டம் கூறும் பகுதிக்குக் கோடிடுவோம்.

## திருவாசகம்

பாடல் - 10

மணிவாசகப் பெருமான் அருளிய திருவாசகத்திலே பிடித்த பத்து என்ற பதிகத்தில் வரும் எட்டாவது பாடலான **"அத்தனே அண்டர்..."** எனத்தொடங்கும் பாடல்.

**ராகம்** - மோகனம்
(இது விருத்தமாக இடம்பெறுகின்றது.)

***திருச்சிற்றம்பலம்***

அத்தனே அண்டர் அண்டமாய் நின்ற
ஆதியே யாதும் ஈ(று)இல்லா
சித்தனே பத்தர் சிக்கெனப் பிடித்த
செல்வமே சிவபெருமானே
பித்தனே எல்லா உயிருமாய்த் தழைத்து
பிழைத்தவை அல்லையாய் நிற்கும்
எத்தனே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

***திருச்சிற்றம்பலம்***

**பொழிப்புரை :**

தந்தையே! தேவராயும் தேவருலகமாயும் நின்ற முதல்வனே! எதனாலும் முடிவுறாத ஞானவடிவினனே! அன்பர் இறுகப்பற்றிக்கொள்ளும் அருட்செல்வமே! சிவபிரானே! பற்றிய அன்பருக்கு அருள் சொரியும் பேரருட் பித்தனே! எல்லா உயிர்களிலும் உடனாய் நின்றும், அவற்றின் வேறாய் நின்றும் மாயம் செய்பவனே! அடியேன் உன்னை விடாப்பிடியாகப்பிடித்துக் கொண்டேன். இனி நீ என்னை விட்டு எங்கு சென்றருளுவது!

✳ சிக்கெனப்பிடித்தல் இரு இடங்களில் சொல்லப் பெற்றிருப்பதற்கான விளக்கத்தை அறியுங்கள்.

## திருவிசைப்பா

பாடல் - 11

கருவூர்த்தேவர் அருளிய "நையாத மனத்தினனை..." எனத் தொடங்கும் திருவிசைப்பாப் பாடல்.

**ராகம்** - ஆனந்தபைரவி
(இது விருத்தமாக இடம்பெறுகின்றது.)

*திருச்சிற்றம்பலம்*

நையாத மனத்தினனை நைவிப்பான் இத்தெருவே
ஐயா நீ உலாப்போந்த அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள் கோடைத் திரைலோக்கிய சுந்தரனே

*திருச்சிற்றம்பலம்*

**பொழிப்புரை :**

உருகாத மனத்தினையுடைய அடியேனை உருகச் செய்யும் பொருட்டுக் கோடை நகரத்துத் திரைலோக்கியசுந்தரம் என்னும் கோயிலில் எழுந்தருளியிருக்கும் தலைவனே! நீ எம்வீதி வழியே திருவுலா வந்த அன்று முதல் இன்று வரை கையாரத்தொழுது கண்ணார அழுதாலும் அடியேனுக்கு அருள் செய்கின்றீரில்லையே.

✳ மனம் நைவதைக் கையும் கண்ணும் காட்டும் வகையைக் கவனியுங்கள்.

ஓம்
சிவாயநம

# திருப்பல்லாண்டு

பாடல் - 12

சேந்தனார்அருளிய "சொல்லாண்ட சுருதிப்பொருள்..." எனும் திருப்பல்லாண்டுப்பாடல். இப்பாடல்கள் தொன்று தொட்டு ஆகிரி, ஆனந்த பைரவி என்ற ராகங்களில் பாடப்பட்டு வருகின்றது. எனினும் இங்கு ஆகிரி என்ற ராகத்தில் விருத்தமாகப் பாடப்படுகிறது.

ராகம் - ஆகிரி
பண் - பஞ்சமம்

*திருச்சிற்றம்பலம்*

சொல்லாண் டசுரு திப்பொருள்
சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண் டிற்சிதை யும்சில
தேவர் சிறுநெறி சேராமே
வில்லாண் டகன கத்திரள்
மேரு விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே

*திருச்சிற்றம்பலம்*

**பொழிப்புரை:**

வேதமெய்ம் மொழியை ஆராய்ந்து வேதவிழுப்பொருள் சிவவெருமானே எனத் துனிந்து கொண்ட தூய மனத்தினரான திருத்தொண்டர் இனத்தவர்களே! சில ஆண்டுகளில் செத்துப் பிறக்கும் சிறுதேவர்களை மெய்ப்பொருள் எனக்கருதிப் பொய்ந்நெறியிற் செல்லாமல் மேரு மலையை வில்லாக வளைத்த அழகனும், இடப வாகனனும், பல ஆண்டுகள் எனும் காலத்தைக் கடந்த என்றுமுள்ளவனுமான எங்கள் சிவபெருமானுக்கே பல்லாண்டு கூறிவாழ்த்துங்கள்.

✳ தொண்டர் கூட்டத்துள்ளவரின் அறிவும் மனமும் எப்படிப்பட்டவை என அறியுங்கள்.

# திருமந்திரம்

பாடல் - 13

திருமூலரால் அருளிச் செய்யப்பட்ட பத்தாந் திருமுறையாக வரும் திருமந்திரப் பாடலான "யாவர்க்குமாம் இறைவர்க்கு..." என்ற பாடல்.

ராகம் - இந்தோளம்
தாளம் - ஆதி

ஓம்
சிவாயநம

*திருச்சிற்றம்பலம்*

யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே

*திருச்சிற்றம்பலம்*

**பொழிப்புரை :**

*பசுவுக்கு ஒரு பிடி புல்லளிக்க எல்லார்க்கும் இயலும். உண்ணும் போது பசித்து வருவோருக்கு ஒரு பிடி அன்னம் அளிக்க எல்லோருக்கும் இயலும். பிறர்க்கு இன்மொழி கூற யாவர்க்கும் இயலும். இவ்வாறே இறைவனுக்கு ஒரு பத்திரம் இட்டு வழிபட எல்லார்க்கும் இயலும்.*

✳ *யாவர்க்கும் செய்யக்கூடிய நான்கு அறங்களையும் நிரற்படுத்துங்கள்.*

## பெரியபுராணம்

*பாடல் - 14*

*பஞ்ச புராண ஒழுங்கில் இறுதியாக இடம்பெறுவது சேக்கிழார் சுவாமிகளால் அருளிச்செய்யப்பட்ட பெரியபுராணமாகும். இதில் "இறவாத இன்ப அன்பு வேண்டி..." எனத் தொடங்கும் பாடல் இடம்பெறுகிறது.*

**ராகம்** - *மத்தியமாவதி*
*(இது விருத்தமாக இடம்பெறுகின்றது)*

*திருச்சிற்றம்பலம்*

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும்போ துன் அடியின் கீழிருக்க என்றார்

*திருச்சிற்றம்பலம்*

**பொழிப்புரை :**

*(காரைக்காலம்மையார் கைலைநாதரிடம்) அன்பரைத் திருவடிக்கீழ் வைக்கும் அறத்தினைப் பூண்டிருக்கும் அப்பா ! அன்புப் பேயாகிய எனக்கு உன்மீது அழிவிலாத இன்ப அன்பு வேண்டும் என வேண்டிய பின் பிறவாதிருக்கும் வரத்தை வேண்டுமெனவும், பிறந்தாலும் உன்னை மறவாதிருக்க வேண்டும் எனவும் வேண்டினார் (முடிவாக) நீ ஆடும்போது உன் அடியின்கீழிருந்து அத்திருநடனத்தைப் பார்த்து மகிழ்ந்திருக்க வேண்டும் என வேண்டினார்.*

✳ *காரைக்காலம்மையாரின் வேண்டுவனவற்றை நிரற்படுத்துவோம்.*

ஓம்
சிவாயநம

# அபிராமி அந்தாதி

பாடல் - 15

அன்னையின் அருள்திறத்தினை அற்புதமாக வெளிக்காட்டுகின்ற அபிராமிப் பட்டரால் அருளிச் செய்யப்பட்ட அபிராமி அந்தாதி என்ற பதிகத்தில் வரும் "தனம் தரும் கல்வி தரும்..." என்ற பாடலாகும்.

ராகம் - சுத்ததன்னியாசி
(இது விருத்தமாக இடம்பெறுகின்றது.)

*திருச்சிற்றம்பலம்*

தனந்தரும் கல்வி தரும் ஒருநாளும் தளர்வறியா
மனந்தருந் தெய்வ வடிவுந்தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லனவெல்லாந் தரும் அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே

*திருச்சிற்றம்பலம்*

✳ அபிராமி கடைக்கண்கள் அன்பர்க்குத் தருமவற்றைக் கூறுவோம்.

# சகலகலா வல்லிமாலை

பாடல் - 16

குமரகுருபர சுவாமிகளால் அருளிச்செய்யப்பட்ட சகலகலாவல்லிமாலை என்ற பதிகத்தில் வரும் "சொல் விற்பனமும் அவதானமும்.."என்ற பாடலாகும். இப் பாடல்கள் நவராத்திரி காலங்களில் வரும் சரஸ்வதி அன்னையைத் துதித்து மெய்யுருகப் பாடப்படுகின்ற பாடல்களாகும்.

ராகம் - கல்யாணி

*திருச்சிற்றம்பலம்*

சொல்விற்பனமும் அவதானமும் கவி சொல்ல வல்ல
நல்வித்தையுந் தந்து அடிமை கொள்வாய் நளினாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால முஞ்சிதையாமை நல்குங்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே சகலகலா வல்லியே

*திருச்சிற்றம்பலம்*

✳ சகலாகலாவல்லியிடம் வேண்டத்தகும் மூன்று வரங்களையும் சொல்வோம்.

ஓம்
சிவாயநம

# நாலாயிர திவ்விய பிரபந்தம்

பாடல் - 17

ஆண்டாள் அருளிய திருப்பாவை என்ற பதிகத்திலிருந்து "ஆழிமழைக் கண்ணா..." எனத்தொடங்கும் திருப்பாவைப் பாடல் ஒன்று இடம்பெறுகின்றது.

ராகம் - சௌராட்சரம்
தாளம் - ஆதி

*திருச்சிற்றம்பலம்*

ஆழி மழைக்கண்ணா வொன்று நீ கைகரவேல்
ஆழியுள்புக்கு முகந்து கொடார்த்தேறி
ஊழி முதல்வன் உருவம் போல் மெய் கறுத்து
பாழியந் தோளுடை பற்பனா பன்கையில்
ஆழி போல் மின்னி வலம்புரி போல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்க முதைத்த சரமழைபோல்
வாழி உலகினிற் பெய்திடாய் நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோரெம்பாவாய்

*திருச்சிற்றம்பலம்*

# திருப்புகழ்

பாடல் - 18

இறுதியாகத் தோத்திரப்பாடல்களில் ஒன்றாக விளங்கும் அருணகிரிநாதரால் அருளிச் செய்யப்பட்ட "கைத்தல நிறைகணி..." எனத்தொடங்கும் திருப்புகழ் இடம் பெறுகிறது. சந்தச் சிறப்பு மிக்க இப்பாடல்களுக் கென்று தனித்துவமான பண்கள் குறிப்பிடப்படவில்லை. எனினும் விரும்பிய ராகத்தில் திருப்புகழைப் பாடி இறையருள் பெறலாம்.

ராகம் - கம்பீரநாட்டை
தாளம் - ஆதி

ஓம்
சிவாயநம
*திருச்சிற்றம்பலம்*

கைத்தல நிறைகனி அப்பமொடு அவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணிக்;
கற்றிடும் அடியவர் புத்தியிலுறைபவர்
கற்பகம் எனவினை கடிதேகும்;
மத்தமும் மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை;
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே;
முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே;
முப்புரம் எரிசெய்த அச்சிவனுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா;
அத்துயர்அதுகொடு சுப்பிரமணிபடும்
அப்புனம் அதனிடை இபமாகி;
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே;

*திருச்சிற்றம்பலம்*

## வாழ்த்து

*திருச்சிற்றம்பலம்*

"வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கோள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்."

*திருச்சிற்றம்பலம்*

ஓம் நமசிவாய

ஓம்
சிவாயநம
உ
"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

## திருமுறைத்தேன் அருளமுதத்தினை உருவாக்கிய தேவார இசைக் கலைமாணி உதயகுமார் அவர்களைப் பற்றி.....

பாடுமீன்கள் இசைபாடும் மட்டு மாநகரின் தெற்கே தமிழும், சைவமும், கலையும் ஒருங்கே அமையப்பெற்ற சிவபூமியாம் தேற்றாத்தீவு தன்னில் வீரக்குட்டி சின்னத்தங்கம் தம்பதியருக்கு 22.07.1969$^{ம்}$ ஆண்டு திருமகவாய் உதய மானவர் உதயகுமார் அவர்கள்.

தனது ஆரம்பக்கல்வியினை தேற்றாத்தீவு மகாவித்தியாலயத்தில் பயின்று அதன்மூலம் தனது பண்ணிசைத் திறனை விருத்திசெய்ததோடு பாடசாலைக் கும் பெருமை சேர்த்தார். பின்னர் தேற்றாத்தீவு இந்து இளைஞர் மன்றத்தில் இணைந்து பஜனை நிகழ்வுகளுக்குத் தலைமை தாங்கி ஆலயத்தில் சமயகுரவர் குருபூசைத்தினங்களில் திருமுறை முற்றோதல் நிகழ்வை நடாத்தியதோடு வெள்ளிக்கிழமை தோறும் கூட்டுவழிபாட்டையும் நடாத்திவந்தார். மேலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பல ஆலயங்களுக்கும் தமது பஜனைக் குழுவோடு சென்று திரு முறைப்பாடல்களை பஜனை நிகழ்வாக நடத்தி வந்தார். இவ்வாறு சுமார் ஏழு வருடங்கள் சிவத்தொண்டினை புரிந்துவந்த இவரின் திறமையைக் கண்ட செங்கலடி சிவதொண்டன் நிலையத்துக்குப் பொறுப்பாக இருந்த செல்லத்துரை சுவாமி அவர்கள் 1998ம் ஆண்டு தென்னிந்திய அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துக்குத் திருமுறையை இசையோடு முறையாகப் பயில்வதற்காக அனுப்பி வைத்தார். நான்கு வருடங்கள் இசைத்துறையோடு திருமுறையில் நன்கு தேர்ச்சி பெற்று "திருமுறை இசைக்கலைமாணி" என்னும் கல்விப் பட்டத்தினைப் பெற்றதோடு தமிழ்நாட்டில் பல திருமுறை நிகழ்வுகளுக்குச் சென்று "திருமுறை இளம்கலைஞர்", "திருமுறை வாணர்" போன்ற பல விருதுகளையும், பதக்கங்களையும், பெற்று மீண்டும் 2002$^{ம்}$ ஆண்டு தமது தாய்நாட்டுக்கு வந்து சேர்ந்தார். தேற்றாத்தீவு இந்து இளைஞர் மன்றமும் கிராமமக்களும் ஒன்று சேர்ந்து தேற்றாத்தீவு விநாயகர் ஆலயத்தில் இவரை வரவேற்று "பண்ணிசைப் புரவலர்" விருதினை வழங்கி பொன்னாடை போர்த்திக்

கௌரவித்தனர். பண்ணிசைப் புரவலரான இவர் மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை போன்ற இந்து அமைப்புகளோடு இணைந்து அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்குத் திருமுறைப் பயிற்சியைத்திறம்பட நடாத்திவந்தார். இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் "கலைமாணி" பட்டத்தினை 2005ம் ஆண்டு பெற்றார். பின்னர் 2005ம் ஆண்டு சிங்கப்பூர் நாட்டுக்குத் திருமுறையை கற்பிப்பதற்கு ஆசியராகச் சென்றார். அங்கு திருமுறையை இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்களுக்குக் கற்பித்ததோடு "பண்ணிசைக் கானமணி" போன்ற பல பட்டங்களையும் பெற்றார்.

தற்போது தமது தாய்நாட்டுக்கு வருகை தந்து மட்டக்களப்பு தேசியக் கல்விக் கல்லூரியில் பகுதிநேர விரிவுரையாளராகக் கடமை புரிவதோடு கல்வித்திணைக்களத்தின் அழைப்பின் பேரில் பட்டிருப்பு, கற்குடா, மட்டக்களப்பு, கல்முனை போன்ற கல்விவலயங்களுக்குட்பட்ட பாடசாலைகளில் சைவசமயம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு திருமுறைப் பாடல்களை பண்ணோடு பயிற்றுவிக்கும் வளவாளராக பணியாற்றி வருகின்றார். மேலும் திருமுறைப் பணியினை சிறப்பாக மேற்கொண்டு வரும் இவருடைய பணியின் மகத்தான ஓர் பணியாக புதியப் பாடத்திட்டத்திற்கமைய மாணவர்களும் மற்றோரும் பயன் பெறும் வண்ணம் 6ம் தரம் தொடக்கம் 11ம் தரம் வரையான சைவசமயப் பாட நூல்களிலுள்ள திருமுறைப் பாடல்களைத் தேர்ந்தெடுத்து திருமுறைத் தேன்அருளமுதம் என்னும் இறுவெட்டினையும், அதிலுள்ள பாடல்களையும் சிறிய நூலுருவாகவும் வெளியிடுவதையிட்டு இந்து சமூகத்தின் சார்பாக இவரை வாழ்த்தி அகமகிழ்வதோடு இவருடைய பணி தொடர்ந்து விருத்தியடைய எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை வேண்டுகின்றோம்.

நன்றி

**தேற்றாத்தீவு இந்து இளைஞர் மன்றமும்**
**மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையும்**

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்."

**நன்றி நவிலல்**

"மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்."

திருமுறையே சைவ நெறிக் கருமூலம் என்பதற்கு அமைய சைவ சமயத்தின் சாரமாகப் போற்றப்படும் திருமுறைகளை நிதமும் ஓதவும், ஒலிக்கவும் செய்யவேண்டும் என்பதற்காக அயராது பாடுபட்டவர் யோகர் சுவாமிகளில் உத்தம சீடரான செல்லத்துரை சுவாமிகள். அவரின் வழிகாட்டலின் மூலம் இந்திய அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் இசைத் துறையோடு திருமுறையினையும் விசேடமாக பயின்று அதன்மூலம் கிடைத்த பயிற்சியினால் அடியேன் கன்னி முயற்சியாக சைவ சமய மாணவர்களின் நன்மை கருதி **திருமுறைத் தேன் அருள் அமுதம்** என்ற இருவட்டினையும் அதோடு தொடர்பான பாடல்களை நூல் உருவாகவும் தயாரித்திருக்கின்றோம். எனது இத்துறையின் வளர்சிக்கு வழிகாட்டிய செல்லத்துரை சுவாமி அவர்களுக்கு அர்ப்பனத்தோடு கூடிய நன்றி மலர்களை காணிக்கையாக்குகின்றேன். மற்றும் இவ் இறுவட்டின் சிறப்பியல்பு பற்றி ஆசியுரை வழங்கிய இராமகிருஸ்னமிஷன் சுவாமி அஜராத்மானந்தாஜீ அவர்களுக்கும் நன்றி உரித்தாகுக. எமது இவ் இறுவட்டின் அவசியம் பற்றி வாழ்த்துரை வழங்கிய பட்டிருப்பு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி. பவளகாந்தன் அவர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். அத்தோடு இவ்இறுவட்டு சிறப்பாக அமைய பாராட்டுரை வழங்கிய தேற்றாத்தீவு இந்து இளைஞர் மன்றம், மட்டக்களப்பு மாவட்ட இந்துப் பேரவையினருக்கும் நன்றி உரித்தாகுக. அத்தோடு திருமுறைகள் பண்ணோடு மாணவர்களுக்கு ஓதப்பயிற்றுவிக்கப்பட வேண்டும். என்பதோடு சைவசமயப் பாடத்திட்டத்திலுள்ள பாடல்கள் இருவெட்டில் வெளிக்கொணர வேண்டும் என ஆரம்பத்தில் ஆலோசனை வழங்கியதோடு மிகுந்த அக்கறை உடையவர்களாக இருந்தவர்கள் மு. நடேசானந்தம் ஆசிரிய ஆலோசகர் பெ. பேரின்பராசா ஆசிரியர் அவர்களுக்கும் நன்றி உரித்தாகட்டும் இவ் இறுவட்டு சிறப்பாக வெளிவர பக்க வாத்தியம் வழங்கிய லயஇசைச் செல்வன் வேல்முருகு சிறிதரன் அவர்களுக்கும், கலா பூசனம் ஜீவன் யோசப் அவர்களுக்கும் எமது நன்றிகள். இவ் இறுவட்டானது ஒலிப்பதிவு செய்யும் போது அதற்கு எம்மோடு தோளோடு தோள் நின்று உதவி செய்த தம்பி வீ.விஸ்வலிங்கம் ஆசிரியர் அவர்களுக்கும் ஆரம்பத்தில் இப் பாடல்களை கணனி வடிவமைப்பு செய்த வீ. சண்முகநாதன் அவர்களுக்கும் இப்பாடல்களை ஒலிப்பதிவு ஒலிக்கலவை மூலம் மெருகூட்டிய சமூகத்தொடர்பு நிலையத்தைச் சேந்த இராஜேந்திரா இருதயம் அவர்களுக்கும் மலர்வேந்தன் ஐயா அவர்களுக்கும் இறுவட்டினுடைய அட்டைப்படத்தை வடிவமைத்து உதவிய S. சச்சிதானந்தம் ஐயா அவர்களுக்கும் இப்பாடல்கள் நூல் உருவாக்கம் செய்வதற்காக பல திருத்தங்களை கூறி மாணவர்களுக்கு புரியும்படி இலகுவான மொழி நடையில் பொழிப்புரை அமைய வேண்டும் என ஆலோசனை வழங்கி எம்மை வழிப்படுத்திய சிவதொண்டன் நிலைய பொறுப்பாளர் எஸ். விநாசித்தம்பி ஐயா அவர்களுக்கும் எங்களுடைய நன்றி உரித்தாகட்டும். இவ் வெளியீட்டுக்கு தங்களால் இயன்ற உதவி நல்கிய ஞா.ஜெயக்குமார் அவர்களுக்கும் தங்கள் நன்றிகள். அத்தோடு இப்பாடல்கள் வருவதற்கு அச்சுப்பதிப்பு வழங்கிய வணசிங்கா அச்சகத்தினருக்கும் எமது மனம் கனிந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம். இவ்வெளியீட்டின் மூலம் இதனைப் பெற்று பயனடைய போகின்ற மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், ஏனைய இந்து சமூகத்தினருக்கும் எங்களது நன்றி மலர்களை காணிக்கை ஆக்குவதோடு இவ் இறுவெட்டினையும் நூலினையும் பொன்போல் போற்றி திருமுறை வளர்வதற்கு தங்களது பணியினை நல்குமாறு வேண்டி விடைபெறுகின்றேன் .

-நன்றி -

வணக்கம்

**இவ்வண்ணம்**

**வீரக்குட்டி உதயகுமார்**



**இசைக்கலைமாணி வி. உதயகுமார் பற்றி...**

பாடுமீன்கள் இசைபாடும் மட்டு மாநகரின் தெற்கே தமிழும், சைவமும், கலையும் ஒருங்கே அமையப்பெற்ற சிவபூமியாம் தேற்றாத்தீவு தன்னில் வீரக்குட்டி சின்னத்தங்கம் அவர்களுக்கு 22.07.1969ம் ஆண்டு திருமகவாய் உதய மானவர் உதயகுமார் அவர்கள்.

இவர் இந்திய அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இசைத் துறையோடு திருமுறைப் பண்ணிசையினையும், விசேடமாகப் பயின்று தேவார இசைக்கலை மாணி என்ற பட்டத்தினைப் பெற்று பண்ணிசை அசிரியராகவும், கர்நாடக சங்கீத ஆசிரியராகவும், திகழ்கின்றார்.

மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அறநெறி ஆசிரியர்களுக்கு பண்ணிசை விரிவுரை யாராக திருமுறையினை திறம்படக் கற்பித்து வருவதோடு மாணவர்களுக்கும் இப்பயிற்சியினை வளங்கி வருகின்றார். அத்தோடு

பட்டிருப்பு கற்குடா கல்முனை போன்ற கல்வி வலயங்களுக்குட்பட்ட பாடசாலைகளில் சைவசமயம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு பண்ணிசை வளவாளராக இருந்து திருமுறையினை பண்ணோடு திறம்படக் கற்பித்து வருகின்றார். இவர் இத்துறையில் இலங்கை இந்திய ஏனைய சிங்கப்பூர், மலேசிய போன்ற நாடுகளில் "திருமுறை இளங்கலைஞர்" "திருமுறைவாணர்" "பண்ணிசைப்புரவலர்" போன்ற விருதுகளும், பதக்கங்களும் பெற்றுள்ளார்.

பண்ணிசையினை ஆலயங்கள் தோறும், பஜனை நிகழ்வாக நடாத்தி வருவதோடு குருபூசை தினங்களில் திருமுறை முற்றோதுதலுக்குத் தலைமைதாங்கி நடாத்தி வருகின்றார்.

இவர் சிங்கப்பூருக்கு பண்ணிசை ஆசிரியராகச் சென்று அங்கு உள்ள மாணவர்களுக்கு திருமுறையினைப் பரப்பியதோடு விருதுகளும், பாராட்டுக்களும் பெற்றவர்.

பேராதனைப் பால்கலைக்கழக கலை மாணிப்பட்ட தாரியாகிய இவர் தற்போது தேசிய கல்விக்கல்லூரியில் பகுதி நேரவிரிவுரையாளராக பணியாற்றி வருகின்றார்.

நன்றி

தேற்றத்தீவு
இந்து இளைஞர் மன்றமும்,
மாவட்ட இந்து இளைஞர் பேரவை